திண்டுக்கல்லில் பரபரப்பு

மார்க்சிஸ்ட்-பாஜவினர் பயங்கர மோதல்

▶ திண்டுக்கல் அருகே மார்க்சிஸ்ட் கட்சியினர், பாஜ, இந்து முன்னணியினர் கடுமையாக மோதிக்கொண்டனர். அடுத்த படம்: மண்டை உடைக்கப்பட்ட பாஜ நிர்வாகி பாலமுருகன்.

இந்து முன்னணியினரும் கைகலப்பு

திண்டுக்கல், ஜூன் 21: திண்டுகல்லில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், இந்து முன்னணியினர் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. இதில் பாஜ கிழக்கு மாவட்ட துணைத்தலைவர் மண்டை உடைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பு பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று மக்கள் சந்திப்பு இயக்கம் பிரசாரம் நடந்தது. அப்போது ஒன்றியச் செயலாளர் சரத்குமார், பாஜ அரசை கண்டித்தும், மதுரை முருக பக்தர்கள் மாநாடு குறித்தும் பேசினார். இதையடுத்து இந்து முன்னணியினர் அங்கு திரண்டு வந்து, மார்க்சிஸ்ட் கட்சியினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அவர்களுக்குள் கைகலப்பு ஏற்பட்டது. இதனை கண்டித்து மார்க்சிஸ்ட் கட்சியினர் திண்டுக்கல் - பெங்களூரு நான்கு வழிச்சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து திண்டுக்கல் ரூரல் டிஎஸ்பி சிபி சாய் சவுந்தர்யன் தலைமையில் போலீசார் வந்து பேச்சுவார்த்தை நடத்தி மறியலை கைவிட செய்தனர். இந்த மறியலால் அப்பகுதியில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கைகலப்பில் காயமடைந்த மார்க்சிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் சரத்குமார், இந்து முன்னணியை சேர்ந்த வினோத் ஆகியோர் திண்டுக்கல் ஜிஹெச்சில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களை பார்க்க வந்த இந்து முன்னணி, பாஜ கட்சியினர் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சியினர் ஜிஹெச் முன்பு மாறி மாறி கோஷங்களை எழுப்பினர். போலீசார் பாஜவினரை அப்புறப்படுத்தினர். கம்யூனிஸ்ட் கட்சியினரை போலீசார் அப்புறப்படுத்திய போது அவர்கள் திடீரென ஜிஹெச் முன்பு மறியலில் ஈடுபட்டனர். அப்போது இந்து முன்னணியினருக்கும், மார்க்சிஸ்ட் கட்சியினருக்கும் மீண்டும் கடும் வாக்குவாதம், கைகலப்பு ஏற்பட்டது. இதில் பாஜ திண்டுக்கல் கிழக்கு மாவட்ட துணை தலைவர் பாலமுருகன் தலையில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதையடுத்து போலீசார் அங்கிருந்தவர்களை கலைத்து விட்டு கம்யூனிஸ்ட் கட்சியை 2 பேர், பாஜ, இந்து முன்னணியை சேர்ந்த 2 பேரை கைது செய்தனர்.

கொலை, கொள்ளை வழக்கு

கொடநாடு பங்களாவை ஆய்வு செய்ய மீண்டும் கோர்ட்டில் மனு

ஜூலை 18க்கு விசாரணை ஒத்தி வைப்பு

ஊட்டி, ஜூன் 21: கொடநாடு பங்களாவை ஆய்வு செய்ய குற்றவாளிகள் தரப்பில் கோர்ட்டில் மீண்டும் மனு செய்யப்பட்டது. இதுதொடர்பான விசாரணையை ஜூலை 18ம் தேதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

நீலகிரி மாவட்டம் கொடநாடு பகுதியில் ஜெயலலிதாவுக்கு சொந்தமான தேயிலை எஸ்டேட்டில் கடந்த 2017 ஏப்ரல் 23ம் தேதி நடந்த கொலை, கொள்ளை தொடர்பாக சயான் உட்பட 10 பேரை போலீசார் கைது செய்தனர். இது தொடர்பான வழக்கு ஊட்டி நீதிமன்றத்தில் கடந்த 8 ஆண்டுகளாக நடந்து வருகிறது.

இந்நிலையில், நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தது. குற்றம் சாட்டப்பட்டுள்ள கேரளா மாநிலத்தை சேர்ந்த சயான் மற்றும் 10-வது குற்றவாளியான ஜித்தன் ஜாய் ஆகியோர் நேரில் ஆஜராகினர். அரசு தரப்பு வழக்கறிஞர்களான ஷாஜகான் மற்றும் கனகராஜ் ஆகியோரும், வழக்கை விசாரித்து வரும் சிபிசிஐடி ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையில் சிபிசிஐடி போலீசாரும் ஆஜராகினர்.

குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில், குற்றம் நடைபெற்ற பங்களாவை ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என ஜித்தின்ஜாய் மனு அளித்தார். அந்த மனுவுக்கு அரசு தரப்பு வழக்கறிஞர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனை எழுத்துப்பூர்வமாக அளிக்கும்படி அரசு தரப்பு வக்கீல்களிடம் நீதிபதி முரளிதரன் தெரிவித்தார். இதையடுத்து வழக்கின் விசாரணையை ஜூலை 18ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றம் நடைபெற்ற கொடநாடு எஸ்டேட் பங்களாவில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என கடந்த 2023ல் சதீஷன், திபு, சந்தோஷ் சாமி ஆகியோர் மனு அளித்தனர். அந்த மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார். இந்த நிலையில் பங்களாவை ஆய்வு செய்ய வேண்டும் என்று ஜித்தின்ஜாய் மனு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஓடும் பேருந்தில் பின்புற டயர் கழன்று ஓடியதால் அதிர்ச்சி

கடையநல்லூர், ஜூன் 21: மதுரையில் இருந்து நேற்று காலை குற்றாலத்திற்கு அரசு பேருந்து சென்று கொண்டிருந்தது. வத்திராயிருப்பைச் சேர்ந்த டிரைவர் சங்கரன் (55) பேருந்தை ஓட்டி வந்தார். 50க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

கொல்லம் - திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் தென்காசி அருகே இடைகால் பகுதியில் பேருந்து சென்றபோது திடீரென அச்சு முறிந்து இரண்டு பின் சக்கரங்களும் கழன்று ரோட்டில் தனியாக ஓடியது. இதனால் பயங்கர சத்தத்துடன் பேருந்தின் பின்பகுதி நெடுஞ்சாலையில் தரை தட்டியது. உடனே பயணிகள் அனைவரும் கூச்சலிட்டனர். இதில் பயணிகள் 6 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து ஆய்க்குடி போலீசார் விரைந்து சென்று அவர்களை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அந்த சமயத்தில் பின்னால் வேறு எந்த வாகனங்களும் வராததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1ஆவது தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி எண். 8(6) கீழ் உடன் விதி எண். 9(1) படிக்கவும்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் -ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப-கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப-கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 22-07-2025 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 22-07-2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்-ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600 024 இடத்தில் 21-07-2025 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	நிலுவைத்தொகை
1.	TCHHL04040 00100085303	திரு. பாலகிருஷ்ணன் P திருமதி. வனலட்சுமி	Rs. 49,83,580/- (ரூபாய் நாற்பத்தொன்பது லட்சத்து எண்பது மூவாயிரத்து ஐந்நூற்று எண்பது மட்டும்) & 16-08-2023	பிளாட் எண். A-101 - ரூ. 27,94,500/ - & பிளாட் எண். A- 201 ரூ. 27,94,500	பிளாட் எண். A-101- ரூ. 2,79,450/- & பிளாட் எண். A-201 ரூ. 2,79,450/-	கையக	11-06-2025 தேதியின்படி ரூ. 6640272/- (ரூபாய் அறுபத்தாறு லட்சம் நாற்பத்தாயிரத்து இரண்டு நூற்று எழுபத்திரண்டு மட்டும்)

அசையாச் சொத்தின் விவரம்: இனம் எண்.1: அனைத்து துண்டு மற்றும் பகுதி பாகம் பிரிக்கப்படாத நிலத்தின் 318.92 சதுர அடி பரப்பளவு கொண்ட மொத்த நிலப் பகுதியும், அம்பத்தூர் தாலுகா, ஒரகடம் கிராமம், எண்.59 இல் உள்ள சார்பிரிவின்படி மனை எண்.1,2,3, & 4 ராஜேந்திரபிரசாத் தெரு, விநாயகபுரம், அம்பத்தூர், சென்னை-600053, பட்டா எண்.1 இன் கீழ் சர்வே எண்..45/2, B-3 இல் உள்ள அளவீடு 10800 சதுர அடி (5400 + 5400 சதுர அடி) பிளாட் அமைந்துள்ள எண்.A-101, முதல் தளம் 621 சதுர அடி பரப்பளவு கொண்டது. இதில் "ஓம் டவர்" எனப்படும் கட்டிடத்தில் உள்ள பகுதியும், மூடப்பட்ட கார் பார்க்கிங் மற்றும் நிலம் ஆகியவை அடங்கும். 5400 சதுர அடி கொண்ட நிலத்தின் எல்லைகளாவன: **வடக்கு:** கால்வாய்; **தெற்கு:** சாலை; **கிழக்கு:** மான்சி ஃபைனான்ஸ் சென்னை லிமிடெட் சொந்தமான நிலம்; **மேற்கு:** 5400 சதுர அடி நிலம். **வடக்கு:** கால்வாய்; **தெற்கு:** சாலை; **கிழக்கு:** திருமதி. ஆர்.எம்.விசாலட்சுமியின் சொந்தமான மனையின் நிலம்; **மேற்கு:** M/s மான்சி ஃபைனான்ஸ் (சென்னை) லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலம். **இனம் எண்.2:** அனைத்து துண்டு மற்றும் பகுதி பாகம் பிரிக்கப்படாத நிலத்தின் 318.92 சதுர அடி கொண்ட சொத்தின் சார்பிரிவின்படி மனை எண்கள்.1,2,3, & 4, ராஜேந்திரபிரசாத் தெரு, விநாயகபுரம், அம்பத்தூர், சென்னை-600053, எண்.59, ஒரகடம் கிராமம், அம்பத்தூர் தாலுகா, சர்வே எண்.45/2, B-3 இல் பட்டா எண்.1 இன் கீழ் அளவீடு 10800 சதுர அடி, (5400 + 5400 சதுர அடி) இதனுன் பிளாட் அமைந்துள்ள எண்.A-201, இரண்டாவது தளம், அளவீடு 621 சதுர அடி "ஓம் டவர்" என்று அறியப்பட்ட கட்டிடத்தில் மூடப்பட்ட கார் பார்க்கிங் கொண்ட உள்ள பகுதி மற்றும் நிலத்தின் 5400 சதுர அடியின் எல்லைகளாவன: **வடக்கு:** கால்வாய் தெற்கு: சாலை, கிழக்கு:மான்சி ஃபைனான்ஸ் சென்னை லிமிடெட் சொந்தமான நிலம் **மேற்கு:** எஸ்டேட் நிலம் 5400 சதுர அடிக: **வடக்கு:** கால்வாய் **தெற்கு:** சாலை **கிழக்கு: திருமதி** ஆர்.எம்.விசாலட்சுமியின் சொந்தமான மனையின் நிலம் மேற்கு:M/s மான்சி ஃபைனான்ஸ் (சென்னை) லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலம். வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்	பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	நிலுவைத்தொகை
3.	TCHHL0404 0001003121 26 & TCHIN04040 0010031360 6	திரு. P. புவனேஷ் திருமதி. B. பவித்ரா	ஒப்பந்த எண். TCHIN0404000100313606 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ. 1,34,732/- ஆகும், ஒப்பந்த எண். TCHHL0404000100312126 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ. 26,21,457/- ஆகும். மொத்தம் ரூ. 27,56,189/- மற்றும் 13-11-2024	Rs. 33,21,000/- (ரூபாய் முப்பது மூன்று லட்சத்து இருபத்தி ஒன்று ஆயிரம் மட்டும்)	Rs. 3,32,100/- (ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்திரண்டு ஆயிரம் நூறு மட்டும்)	கையக	11-06-2025 தேதியின்படி ஒப்பந்த எண். TCHIN0404000100313606 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ. 152573/- மற்றும் ஒப்பந்த எண். TCHHL0404000100312126 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ. 2844195/- ஆக மொத்தம் ரூ. 2996768/-ஆகும்.

அசையாச் சொத்தின் விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதியின் காலி நிலம் அமைந்துள்ள மனை எண் 33 அளவீடு அதன் பரப்பளவு 600 சதுர அடி மற்றும் மனை எண் 34 அதன் பரப்பளவு 630 சதுர அடி. 19.09.2022, தேதியிட்ட CMDA ஒப்புதல் எண்.P.P.D/L.O.No.214/2022 அமைந்துள்ள பழைய சர்வே எண். 188 இல், புதிய சர்வே எண்கள்.188/15 & 188/16 மற்றும் பெருங்காவூர் கிராமம், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள "ஸ்ரீ சுபா அம்மன் நகர்" லேஅவுட் என பெயரிடப்பட்ட REG/லேஅவுட்/2327/2021 மற்றும் RERA எண். TNRERA/REG/0381/2023 மனை எண் 33 நிலத்தின் எல்லைகளாவன: வடக்கில்: மனை எண் 32, **தெற்கில்**- மனை எண்.34 **கிழக்கில்**- மனை எண்.24 **மேற்கில்**- சாலை **அளவீடு:** வடக்குப் பக்கம்- 30 அடி, தெற்குப் பக்கம்- 30 அடி, கிழக்குப் பக்கம்- 20 அடி, மேற்குப் பக்கம்- 20 அடி, மனை எண்.34இன் எல்லைகளாவன: வடக்கில் மனை எண் 33 தெற்கில் - சர்வே எண்.190 கிழக்கில் - மனை எண்.23 மேற்கில்: சாலை அளவீடு: வடக்குப் பக்கம் - 30 அடி, தெற்குப் பக்கம்- 30 அடி, கிழக்குப் பக்கம் - 20 அடி 6 அங்குலம், மேற்குப் பக்கம்- 21 அடி 6 அங்குலம் திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் ரெட்ஹில்ஸ் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்	பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	நிலுவைத்தொகை
4.	TCHHL084200 0100216282 & TCHHF084200 0100216515 & TCHIN0842000 100217219	திரு. அன்பின் பிரபு எஸ், திருமதி. அம்பிகா துரை	ஒப்பந்த எண். TCHHF0842000100216515 இன் படி தொகை ரூ. 15,50,361/- செலுத்த வேண்டியுள்ளது, ஒப்பந்த எண்.TCHIN0842000100217219 இன் படி தொகை ரூ. 1,46,070/- செலுத்த வேண்டியுள்ளது, ஒப்பந்த எண். TCHHL0842000100216282 இன் கீழ் படி தொகை ரூ. 18,48,258/- செலுத்த வேண்டியுள்ளது, மொத்தம் ரூ 35,44,689/- & 12-12-2024	Rs. 68,04,000/- (ரூபாய் அறுபத்தெட்டு லட்சத்து நான்கு ஆயிரம் மட்டும்)	Rs. 6,80,400/- (ரூபாய் ஆறு லட்சத்து எண்பதாயிரத்து நானூறு மட்டும்)	கையக	11-06-2025 தேதியின்படி ஒப்பந்த எண். TCHHF0842000100216515 இன் கீழ் நீங்கள் செலுத்த வேண்டிய தொகைரூ. 1645641/- ஒப்பந்த எண். TCHIN0842000100217219 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகைரூ. 155320/- ஒப்பந்த எண். TCHHL0842000100216282 ரூ. 1962377/- ஆக மொத்தம் ரூ. 3763338/- ஆகும்

அசையாச் சொத்தின் விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதி வீட்டு மனை அமைந்துள்ள மனை 46,47,58 & 59, ஸ்ரீ சாய்நகர் அமைந்துள்ள (பழைய ச.எண் 454/4) சர்வே எண்.454/4B & 455/2 இன், பட்டாவின்படி ச.எண்.454/4BIAIAA & 455/2AIAIAIA இல் உள்ளது. இது காஞ்சிபுரம் தாலுகா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், மதுரா சங்கராபுரம் கிராமத்தில் பழையசீவரத்தில் அமைந்துள்ள 5670 சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ளது. எல்லைகளாவன: (மனை எண்.46): **வடக்கு:** மனை எண்.47 **தெற்கே:** காலியாக உள்ள நிலம் **கிழக்கு:** மனை எண்.59 & 60 **மேற்கு:** சாலை (மனை எண்.47) இல் எல்லைகள்: **வடக்கு:** மனை எண்.48 **தெற்கே:** மனை எண்.46 **கிழக்கு:** மனை எண்.58 **மேற்கு:** சாலை கிழக்கு முதல் மேற்கு வரை இருபுறமும் 45 அடி அளவுள்ள வீட்டுத் தளத்திற்கு இடையில் பக்கவாட்டு மற்றும் வடக்கிலிருந்து தெற்கு வரை இருபுறமும் 27 அடி மற்றும் மொத்த அளவீடு 1215 சதுர அடி எல்லைகளாவன (மனைஎண்.58) : வடக்கு: மனை எண்.57 தெற்கே. மனை எண்.59 கிழக்கு: சாலை மேற்கு: மனை எண்.47 கிழக்கிலிருந்து மேற்கு வரை இருபுறமும் 55 அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்கு வரை இருபுறமும் 27 அடி அளவுள்ள வீட்டுத் தளத்திற்கு இடையில் மொத்த அளவீடு 1485 சதுர அடி. எல்லைகளாவன (மனை எண்.59) : வடக்கு: மனை எண்.58 தெற்கே: மனை எண்.60 கிழக்கு: சாலை, மேற்கு: மனை எண்.46 வீட்டுத் தளத்திற்கு இடையில் கிழக்கிலிருந்து மேற்காக 55 அடி அகலம், இருபுறமும் வடக்கிலிருந்து தெற்காக 27 அடி அகலம், இருபுறமும் மொத்த அளவீடு 1485 சதுர அடி. இந்த சொத்து காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் வாலாஜாபாத் சார் பதிவு மாவட்டத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்	பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	நிலுவைத்தொகை
5.	TCHHL04900 00100249027 & TCHIN04900 00100250850	திருமதி. சுபா தங்கதுரை திரு. நரேஷ் R	ஒப்பந்த எண். TCHIN0490000100250850 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ.156067 மற்றும் ஒப்பந்த எண். TCHHL0490000100249027 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ. 42,81,929/- மொத்தம் ரூ. 44,37,996/- & 08-01-2025	Rs. 57,36,500/- (ரூபாய் ஐம்பது ஏழு லட்சத்து முப்பத்தாறு ஆயிரத்து ஐநூறு மட்டும்)	Rs. 5,73,650/- (ரூபாய் ஐந்து லட்சத்து எழுபது மூன்று ஆயிரத்து ஆறு நூற்று ஐம்பது மட்டும்)	கையக	11-06-2025 தேதியின்படி ஒப்பந்த எண். TCHIN0490000100250850 இன் படி தொகை ரூ. 167515/- உங்களால் செலுத்தப்பட வேண்டிய தொகையாகும். மேலும், ஒப்பந்த எண். TCHHL0490000100249027 இன் படி தொகை ரூ. 4471462/- உங்களால் செலுத்த வேண்டிய தொகையாகும். மொத்தம் ரூ. 4638977/- ஆகும்

அசையாச் சொத்தின் விவரம்: அனைத்து துண்டு மற்றும் காலி வீட்டு மனை அமைந்துள்ள மனை எண் 108 G & (A,B,C,D) பகுதி அளவீடு 1043 சதுர அடி பழைய சர்வே எண்கள். 169/1 பகுதி & 169/2 பகுதி, பட்டா எண். 975 & 976 இன் கீழ், பட்டா புதிய சர்வே எண். 169/1A1 & 169/1A2 இன் படி, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகா, நாவலூர் கிராமத்தில் கிராம எண். 33 இல் அமைந்துள்ளது. 03/08/2018 தேதியிட்ட Na. Ka. எண். 2476/2018/MLPA மாமல்லபுரம் உள்ளூர் திட்டமிடல் ஆணையத்தின் கீழ் 18/09/2018, தேதியிட்ட Na. Ka. No. 151/2018/B1, இன்படியும் 17/02/2011 தேதியிட்ட நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குனரகத்தின் NA KA NO.9862/10BA1 -இன் படியும் 27/01/2023 தேதியிட்ட பிளாக் டெவலப்மென்ட் அதிகாரி, திருப்போரூர் துணைப்பிரிவு அனுமதி எண்.Se. Mu. Na. Ka. No. 3179 - 9/2022/B1-இன் படியும் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆவண எண் TNRERA/REG/0332/2023-இன்படியும் 16/02/2023 தேதியிட்ட புரொஜக்ட்டின் பதிவு சான்றிதழ் எண் TN 29/ Regularisation layout/0759/2023 மற்றும் 108 G & (A,B,C,D) பகுதியின்படியும் உருவாக்கப்பட்ட 'பார்க் என்க்ளேவ்' என்று அறியப்பட்ட பகுதியில் உள்ள சொத்தின் எல்லைகளாவன: வடக்கு: 20 அடி அகல லேஅவுட் சாலை தெற்கு: S. எண். 170 கிழக்கில் காலியாக உள்ள நிலம்: பிளாட் எண். 109 H & (ABCD) பகுதி மேற்கு: பிளாட் எண். 108 H & (ABCD) பகுதி அளவிடுதல்: வடக்குப் பக்கம்: 28 அடி, தெற்குப் பக்கம்: 28 அடி, கிழக்குப் பக்கம்: 38 அடி, மேற்குப் பக்கம்: 36 அடி 6 அங்குலம், பிளாட் எண்.108 G & (A,B,C,D) பகுதி - 1043 சதுர அடி. அடி., திருப்போரூர் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் ஆகியவற்றில் அமைந்துள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்	பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	நிலுவைத்தொகை
6.	TCHHL04040 00100098932 & TCHIN04040 00100100259	திரு. P. கோயில்ராஜ் திலகர் திருமதி மெர்லின் செல்வராணி S	ஒப்பந்த எண். TCHHL0404000100098932 இன்படி ரூ. 9,70,958/- உங்களால் செலுத்தப்பட வேண்டியுள்ளது மற்றும் ஒப்பந்த எண் TCHIN0404000100100259இன் படி செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 38,999/- மொத்தம் ரூ. 10,09,957/- & 08-01-2025	Rs. 19,20,600/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து இருபது ஆயிரம் அறுநூறு மட்டும்)	Rs. 1,92,060/- (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூறு இரண்டாயிரத்து அறுபது மட்டும்)	கையக	11-06-2025 தேதியின்படி ஒப்பந்த எண். TCHHL0404000100098932 இன் படி செலுத்தப் படவேண்டிய ரூ. 1035253/- மற்றும், ஒப்பந்த எண். TCHIN0404000100100259 இன் படி நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ. 45047/- மொத்தம் ரூ. 1080300/- ஆகும்.

அசையாச் சொத்தின் விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதி சொத்து (காலி நிலம்) அமைந்துள்ள மனை எண் 13 & 23, ராஜேஷ் நகர், நெமிலிச்சேரி கிராமம், ஆவடி தாலுகா திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ச.எண் 66/2-B, பட்டா எண்.2560 & 2561 இல் பட்டாவின் படி புதிய சார்பிரிவு 66/9 66/10 873 சதுர அடி நிலம்தின் நடுப்பகுதி அளவீட்டின் எல்லைகளாவன: **வடக்கில்** மனை எண்.13 இன் மீதமுள்ள பகுதி **தெற்கே:** மனை எண்.23 இன் மீதமுள்ள பகுதி **கிழக்கே** 16 அடி அகல சாலை: **மேற்கே:** ச. எண்.59 மனை எண்.13 க்கு (தெற்கு பகுதி) **அளவீடுகள்:** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் : 26 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம்: 26.6 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கம்: 15.9 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் : 14.9 அடி, மனை எண்.23 (வடக்குப் பகுதி) அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் : 26.6 அடி, கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் : 26 அடி, வடக்குத் தெற்காக கிழக்குப் பக்கம்: 18 அடி, வடக்குத் தெற்காக மேற்கு பக்கம்: 18 அடி, ஆவடி சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்கும்விதமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:

கவனிக்க: மின்-ஏலம் ஆனது https://www.bankauctions.in/ என்ற இணைய முகப்பு மூலம் 22-07-2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:

1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். 2. நிர்ணய விலைக்கு குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. 3. ஏலம் உயர்த்தும் தொகை: ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் TATA CAPITAL HOUSING FINANCE LTD பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியுடையவராக இருந்தால், உயர்ந்தபட்ச ஏலதாரர் விற்பனைக்குத் தகுதியுடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 6. பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியின் பேரில் 15-07-2025 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம்.** 8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், ஏலமிடப்பட்ட சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். 9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக செலுத்த வேண்டும். 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15 ஆவது நாளுக்கு பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 10. மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடா செய்ய தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். ஏற்கெனவே ஏலம் எடுத்தவர் சம்பந்தப்பட்ட நிலம்/ தொகை தொடர்பாக எந்த உரிமையையும் கோர முடியாது. 11. மேற்கூறப்பட்டசொத்து தொடர்பான **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்குத்** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள் பற்றியும், மேலும் அந்த சொத்து தொடர்பான சொத்தின் தன்மை மற்றும் மதிப்பு குறித்த பிற விவரங்கள் மற்றும் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து ஏலம் எடுக்கத் திட்டமிடும் ஏலதாரர்கள் தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்-ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள்- சேவை வழங்குநர், M/s. 4 குளோசர், பிளாக் எண்.605 A, 6ஆவது தளம், மைத்ரிவனம் வணிக வளாகம், அமீர்பேட், ஹைதராபாத்-500038 என்ற முகவரியிலோ மின்னஞ்சல் : info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி, கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண்- 9999078669-க்கு அனுப்பவும். 13.** உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும். மேலும் சலான் நகல் பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 14. மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் https://surl.li/rkmpda கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும். **15. மேலும் https://www.tatacapital.com/property-disposal.html என்ற இணைப்பையும் காண்க. கவனத்தில் கொள்க- டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/ முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழே கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 21.06.2025

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.

மாணவிக்கு பாலியல் தொல்லை அரசு பள்ளி ஆசிரியர் போக்சோவில் கைது



திருவிடைமருதூர், ஜூன் 21: தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள திருநறையூரை சேர்ந்தவர் ரமேஷ்(56). இவர் திருவாரூர் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். பள்ளி முடித்து மாலை நேரத்தில் மாணவ, மாணவிகளுக்கு திருநறையூரில் டியூஷன் எடுத்து வந்துள்ளார். அவரிடம் 11ம் வகுப்பு படிக்கும் 16 வயது மாணவி டியூசனுக்கு வந்தார். பாடம் சொல்லி கொடுக்கும்போது மாணவிக்கு ஆசிரியர் ரமேஷ் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்தார். இதையடுத்து மாணவியின் தாய் மற்றும் உறவினர்கள் ஆடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் ஆசிரியர் ரமேஷை போலீசார் நேற்று போக்சோ சட்டத்தில் கைது செய்தனர். பின்னர் அவரை நீதிபதி முன் ஆஜர்படுத்தி, திருவிடைமருதூர் கிளை சிறையில் அடைத்தனர்.

முருகர் மாநாட்டுக்கு வரும் வாகனங்களுக்கு பாஸ் தேவையில்லை

போலீசாரிடம் ஆவணங்களை பதிவு செய்த பிறகே அனுமதி

ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை ஜூன் 21: முருக பக்தர்கள் மாநாட்டிற்கு வரும் வாகனங்களின் காப்பீடு உள்ளிட்ட ஆவணங்களை போலீசாரிடம் பதிவு செய்த பிறகே அனுமதிக்க வேண்டுமென ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரை வண்டியூர் அருகேயுள்ள திடலில் நாளை (ஜூன் 22) முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டுக்கு அனுமதி வழங்கும் போது காவல்துறை 50க்கும் மேற்பட்ட நிபந்தனைகளை விதித்தது. இந்த மாநாட்டுக்கு வருவோர் அந்தந்த உட்கோட்ட டிஎஸ்பியிடம் வாகன பாஸ் பெற வேண்டும் என்பது நிபந்தனைகளில் ஒன்றாகும். இந்த உத்தரவை எதிர்த்து இந்து முன்னணி சார்பில் ஐகோர்ட் கிளையில் மேல்முறையீடு மனு செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், ராஜசேகர் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், "வாகனத்தில் வரக்கூடியவர்கள் முறையான வாகன அனுமதி பாஸ் இருந்தால் மட்டுமே மதுரை மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என போலீசார் உத்தரவிட்டுள்ளனர். இந்த உத்தரவு பிறப்பிப்பதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அரசியல் கட்சிகளுக்கு இதுபோன்ற எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும்" என தெரிவிக்கப்பட்டது.

அரசு தரப்பில், "இதுபோன்று அதிகளவு பொதுமக்கள் கூடும் மாநாடுகளுக்கு வரக்கூடிய வாகனங்களை முறைப்படுத்துவது, அனுமதி பாஸ் வழங்குவது வழக்கமான நடைமுறை தான். இந்த உத்தரவுகளை தலைமை காவலருக்கு மேல் உள்ள அதிகாரிகள் வழங்கலாம் என சட்டம் உள்ளது. இந்த உத்தரவு, மாநாட்டுக்கு வரக்கூடிய வாகனங்களை கட்டுப்படுத்துவதற்கு இல்லை. வாகனங்களை முறைப்படுத்தும் நோக்கில் தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "மாநாட்டுக்கு வரும் வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் காவல் துறை சோதனை மையம் அமைக்க வேண்டும். மாநாட்டிற்கு வரக்கூடிய வாகனங்கள் வாகன காப்பீடு, ஓட்டுநர் உரிமம், ஓட்டுநரின் ஆதார் அட்டை, வாகன பதிவுச் சான்று உள்ளிட்ட ஆவணங்களை காவல்துறையிடம் வழங்க வேண்டும். இதனை பதிவு செய்த பிறகே அனுமதிக்க வேண்டும். மாநாட்டிற்கு வரக்கூடிய வாகனங்களுக்கு பாஸ் தேவையில்லை" எனக் கூறி வாகனங்கள் பாஸ் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை ரத்து செய்து உத்தரவிட்டனர். அரசு தரப்பில், "நீதிமன்ற உத்தரவுப்படி உரிய ஆவணங்கள் இல்லையெனில் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும்" என தெரிவிக்கப்பட்டது.

2 குழந்தைகளின் தாய்க்கு கொடுமை

பள்ளி தோழியை காரில் கடத்தி பலாத்காரம் செய்த நண்பன்



மார்த்தாண்டம், ஜூன் 21: பஸ்சுக்காக காத்திருந்த 2 குழந்தைகளின் தாயை காரில் கடத்தி சென்று பலாத்காரம் செய்த பள்ளி நண்பர் மீது போலீசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டம் மஞ்சாலுமூடு பகுதியை சேர்ந்தவர் ரதி (36) (பெயர் மாற்றப்பட்டுள்ளது). பிளஸ் 2 வரை படித்துள்ளார். இவர் அதே பகுதியில் உள்ள ஒருதுணிக்கடையில் வேலை பார்த்து வருகிறார். இவருக்கு கணவர், 2 பிள்ளைகள் உள்ளனர்.

இவரது வீட்டின் அருகே வசித்து வருபவர் ஜான் (36) (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவருக்கு திருமணமாகி மனைவி, பிள்ளைகள் உள்ளனர். ஜானும், ரதியும் பள்ளியில் ஒன்றாக படித்தபோது நட்புடன் பழகியுள்ளனர். இந்த பழக்கம் திருமணமான பிறகும் தொடர்ந்தது.

இந்நிலையில் ரதி கடந்த சில நாட்களுக்கு முன், மதுரையில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு சென்று விட்டு இரவு சுமார் 9.30 மணியளவில் குழித்துறை வந்திறங்கினார். வீட்டுக்கு செல்வதற்காக பஸ் நிறுத்தத்தில் பஸ்சுக்காக காத்திருந்தார். அப்போது அவ்வழியாக காரில் வந்த ஜான், ரதியை வீட்டில் விடுவதாக அழைத்து சென்றுள்ளார். ஆனால் காரை தனது வீட்டுக்கு ஓட்டி சென்று ரதியின் கையை பிடித்து இழுத்து சென்றுள்ளார். இதை சற்றும் எதிர்பாராத ரதி அதிர்ச்சியில் உறைந்தார். தன் வீட்டில் யாரும் இல்லை என்று கூறி ரதியை பலாத்காரம் செய்தார். கதறி அழுத ரதியிடம் யாரிடமாவது கூறினால் உன்னையும், உனது பிள்ளைகளையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார். பின்னர் காரில் ஏற்றி அவரது வீடு அருகே இறக்கிவிட்டு சென்றுவிட்டார்.

இதுகுறித்து கணவரிடம் கூறி ரதி கதறி அழுதார். அவர் ஜானின் மனைவியிடம் சொல்லும்படி அவர் கூறவே, அங்கு சென்றுள்ளார். அப்போது ஜான், அவரது மனைவி, சகோதரி மற்றும் தாயார் இருந்தனர். அவர்களிடம் ரதி நடந்த விபரத்தை கூறி கதறினார். ஆனால் இதனை ஏற்க மறுத்த ஜானின் சகோதரி செருப்பை எடுத்து ரதியை அடித்தார். இதையடுத்து ஜான் ரதியை சரமாரி தாக்கி கீழே தள்ளி வயிற்றில் மிதித்துள்ளார். இதில் காயமடைந்த ரதி குழித்துறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதுகுறித்து அவரது புகாரின்படி மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

சேலம் இரும்பாலையில் ஒன்றிய அமைச்சர் குமாரசாமி ஆய்வு

சேலம், ஜூன் 21: ஒன்றிய கனரக தொழில்துறை மற்றும் எக்கு துறை அமைச்சர் குமாரசாமி நேற்று பெங்களூரில் இருந்து விமானம் மூலம் சேலம் வந்தார். பின்னர் கார் மூலம் இரும்பாலைக்கு வந்த அவருக்கு, நிர்வாக இயக்குனர் பிரபீர்குமார் சர்க்கார் தலைமையில் அலுவலர்கள் வரவேற்பு அளித்தனர். இதனையடுத்துஇரும்பாலை வளாகத்தில் மகிழமரக்கன்றை அமைச்சர் குமாரசாமி நட்டுவைத்தார்.

தொடர்ந்து இரும்பாலைக்குள் சென்ற அவர்கள், ஒவ்வொரு பிரிவாக சென்று ஆய்வு செய்தார். அப்போது, இரும்பாலையின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் வளர்ச்சி திட்ட பணிகளை பார்வையிட்டு, அதிகாரிகளிடம் அதன் விவரங்களை கேட்டறிந்தார். தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடினர். இன்று (21ம் தேதி) காலை இரும்பாலை வளாகத்தில் நடைபெறவுள்ள சர்வதேச யோகா தின விழாவில் கலந்து கொள்கிறார்.